ங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 382

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
7 ஒக்டோபர் - 1987.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்.
திணைக்களத் தலைவர்களுக்கும்.

விபத்து லீவும் விசேட பிணி லீவும்
தாபனக் கோவை - அத்தியாயம்

20-11-1986ஆம் தேதிய 352-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் 9:2 ஆம் உபபிரிவுடன் பின்வரும் உபபிரிவுகளை சேர்த்துக் கொள்க. இதன் மூலம் தாபனக் கோவையின் XII -ஆம் அத்தியாயத்தின் 9-ஆம் பிரிவு திருத்தப்படுகிறது.

9:2:3 நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமான பதவியை வகிப்பவராலும் அவ்வாறன பதவியை வகிக்காதவரானு லும் கடமையின் போதல்லாது எதிர்பாராத விபத்தொன் றில் காயமடைந்த ஓர் அரசாங்க உத்தியோகத்தருக்கு அல்லது நீதித்துறை உத்தியோகத்தருக்கு முழுச்சம்பளத்துட னை விசேட பிணி லீவை மருத்துவ சபையின் சிபார்சின் பேரிலும் அவ்வாறன சலுகை அத்தகைய விபத்துக்கு அவசி யந்தான் எனத் தாபனப் பணிப்பாளர் தீர்மானிக்கும் பட்சத் திலும் ஓர் அமைச்சின் செயலாளர் வழங்கலாம்.

9:2:4 இத்தகைய லீவு அவரது சாதாரண அனுமதித்த லீவுக்கெதி ராகக் கணிக்கப்படமாட்டாது.

ஒப்பம்: எம்.என். ஜுனைட்
பதில் செயலாளர்.,
அரசாங்க நிருவாக அமைச்சு.